**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்**

**<u>சுருக்குமுறை வழக்கு எண் (STC.No). 89/2025</u>**

புகார்தாரர் திரு.அஸ்ரப் அன்சாரி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திரு.வீரமணிகண்டன், இளநிலை உதவியாளர் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அஸ்ரப் அன்சாரி | வயது | : | 60/2026 |
| தந்தை பெயர் | : | அப்துல் வஉறாப் | தாலுகா | : | இலுப்பூர் |
| கிராமம் | : | முக்கணாமலைப்பட்டி | தொழில் | : | |

**<u>ம.சா.: 1–</u>**

**<u>நாள் :22.07.2026</u>**

**<u>முதல்விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். நான் புகார்தாரர் தரப்பு 1வது சாட்சி ஆவேன். என் தரப்பில் நிரூபண உறுதிக்கூற்றை தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது என் கையொப்பம் தான். நான் சொல்ல சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5** வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 20.12.2024 ஆம் தேதியிட்ட சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா வங்கி, கந்தர்வகோட்டை கிளையின் **காசோலை அசல் (காசோலை எண்.012233) ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 20.01.2025 ஆம் தேதியிட்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இலுப்பூர் கிளையின் திருப்பப்பட்ட **மொமோ அசல் ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 28.01.2025 ஆம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் **அலுவலக நகல் மற்றும் அஞ்சலக அறிவிப்பின் ரசீது அசல் ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 01.02.2025 ஆம் தேதியிட்ட **அஞ்சலக ஒப்புதல் அட்டை ம.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
5. 12.02.2025 ஆம் தேதியிட்ட **பதிலறிவிப்பு சார்வு நகல் ம.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்.

**//sd//– திருமதி.M.சாதத்துணிஷா,B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், இலுப்பூர் .**